


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 255 | 09.03.2026 | MONDAY | MAASI : 25 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 255 | 09.03.2026 | திங்கள்கிழமை | மாசி : 25 | விலை : ரூ.5/–

## “மகளிர் உரிமைத் தொகையை ரூ.2,000 ஆக உயர்த்தி

# “வாக்குறுதி அளித்தது அதிமுக தான்”

சேலம், மார்ச்.9-

மகளிர் உரிமைத் தொகையை ரூ.2,000 ஆக உயர்த்தி வாக்குறுதி அளித்தது அதிமுக தான் என சேலத்தில் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சேலத்தில் அதிமுக சார்பில் நடைபெற்ற மகளிர் தின விழாவில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கலந்து கொண்டு கேக் வெட்டினார். பின்னர் கேக்கை மகளிர் அணியினருக்கு வழங்கி மகளிர் தின வாழ்த்து தெரிவித்துக் கொண்டார்.

இதில் சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன், ஏற்காடு எம் எல் ஏ சித்ரா, அதிமுக மகளிர் அணியினர் திரளாக கலந்து கொண்டனர். .

பின்னர், செய்தியாளர்களிடம் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறியது: “மகளிர் உரிமைத் தொகை ரூ 2,000 ஆக உயர்த்தி வாக்குறுதியில் நான் அறிவித்திருந்தேன். இதைத் தான் ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

இலவசம் கூடாது என்ற விஜய் தற்போது இலவசங்களை அறிவித்திருப்பது குறித்து அவரிடம்தான் கேட்க



வேண்டும்.

ஒவ்வொரு கட்சியும் தேர்தல் நேரத்தில் வாக்குறுதி தரும். எங்களது கட்சியும் தேர்தல் வாக்குறுதியை அளித்துள்ளது. அதிமுக தேர்தல் அறிக்கையில் என்னென்ன செய்தோம் எனத் தெளிவாக ட்விட்டரில் விளக்கி உள்ளோம். அதன்படி, அதிமுக ஆட்சி அமைந்ததும் நாங்கள் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

‘அம்மா இருசக்கர வாகனம்’ தரப்படும் என அறிவித்து இருக்கிறோம். 5 லட்சம் மகளிருக்கு ரூ. 25 ஆயிரம் மானியத்தில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளோம். அவற்றை செய்வோம்” என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

முன்னதாக தனது எக்ஸ் பக்கத்தில் மகளிர் தின வாழ்த்தை பகிர்ந்த இபிஎஸ், “எனது அன்பிற்குரிய தாய்மார்களுக்கும், எனதருமை சகோதரிகளுக்கும், எதிர்காலத்தை ஆளப் போகும் இளம் கண்மணிகளுக்கும் எனது உளம் கனிந்த மகளிர் தின நல்வாழ்த்துகள்! ஒரு குடும்பத்தின் ஆணிவேராக இருந்து, துன்பங்களை சுமந்து அன்பையும் அரவணைப்பையும் வாரி வழங்கும் பெண்களின் தியாகத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை.

இதனை உணர்ந்துதான் ஜெயலலிதா பெண்களுக்கான பல புரட் சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்தார். இன்றைய விடியா திமுக ஆட்சியில், பாதுகாப்பற்ற சூழ்நிலையாலும் , விலைவாசி உயர்வாலும், தத்தளிக்கும் பெற்றோர்கள் மற்றும் குடும்பத் தலைவிகளின் கவலை எனக்கு நன்றாகவே புரிகிறது. அந்த சுமையை குறைப்பதே எனது முதல் கடமை!

அ இ அ தி மு க ஆட்சி அமைந்தவுடன், குடும்பத்தின் பொருளாதார தூணாக இருக்கும் பெண்களுக்கு மாதம் ரூ. 2,000 உதவித்தொகை வழங்கப்படும். இது வெறும் பணம் அல்ல, பெண்களின் உழைப்புக்கான அங்கீகாரமும் மரியாதையும் ஆகும். பெண்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எங்கள் அன்பின் அடையாளமுமாகும்.

மகளிர் சுயமாக சாதிக்க உதவும் வகையில் 5 லட்சம் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

உங்கள் கனவுகள் நனவாக, உங்கள் பாதுகாப்பு , நீங்கள் பயணிக்கும் போதும் , நம் பிள்ளைகள் படிக்கின்ற இடங்களிலும், உங்கள் பணியிடங்களிலும் உறுதி செய்யப்பட, நான் என்றும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன் என்பதை அன்போடு தெரிவித்து கொள்கிறேன் , தாயுள்ளத்தோடு தன் கடமைகளை ஆற்றி வரும் சகோதரிகள் அனைவருக்கும், மீண்டும் நல்வாழ்த்துக்கள்” என்று தெரிவித்துள்ளார்.



## சிலிண்டர் விலை உயர்வு மோடி ஆட்சியின் கார்ப்பரேட் ஆதரவு பாதையின் விளைவு

### சிபிஎம் கண்டனம்

“மோடி அரசின் செங்குத்தான சமையல் எரிவாயு விலை உயர்வு சாதாரண ஏழை, எளிய, நடுத்தர மக்கள் தலையின் மீது இடியை இறக்கியுள்ளது. சர்வதேச முதலாளிகள் தீர்மானிப்பதை இந்திய உழைப்பாளி மக்களின் தலையில் சுமத்தும் கார்ப்பரேட் ஆதரவு பாதையை மோடியின் ஆட்சி தீவிரப்படுத்துவது மேலும் இதுபோன்ற விளைவுகளை ஏற்படுத்தும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கிறது” என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘மோடி தலைமையிலான பாஜக ஆட்சி நாடு முழுவதும் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு ரூபாய் 60 உயர்த்தியுள்ளது. ஏற்கனவே மோடி அரசின் ஜி.எஸ்.டி. உள்ளிட்ட வரிக் கொடுமையினாலும், விலைவாசி உயர்வினாலும் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வரும் சாதாரண ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு தற்போது எரிவாயு விலையை உயர்த்தி மக்கள் தலையின் மீது இடியை இறக்கியுள்ளது.

இந்த விலை உயர்வினால் சங்கிலித் தொடர் போல உணவுப் பொருட்களின் விலைகள் பல மடங்கு உயரும் ஆபத்து உள்ளது. இந்த எரிவாயு விலை உயர்வினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிப்பதோடு, உடனடியாக திரும்பப் பெற வேண்டுமெனவும் வலியுறுத்துகிறது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் பொருட்களின் விலை குறைந்த போதும் பெட்ரோல் டீசல், சமையல் எரிவாயு விலைகளை ஒன்றிய பாஜக அரசு குறைக்கவில்லை. தற்போது ஈரான் மீது அமெரிக்கா ஏகாதிபத்தியமும் இஸ்ரேலும் இணைந்து நடத்தும் போர் காரணமாக, எரிவாயு, பெட்ரோல் உள்ளிட்ட எந்த ஒரு எரிபொருளுக்கும் தட்டுப்பாடு இருக்காது என கடந்த சில நாட்களாக பாஜக ஆட்சியினர் பேசி வந்தனர். தற்போது சிலிண்டருக்கு ரூபாய் 60 உயர்த்தி இருப்பது அநியாயமானது.

ஏகாதிபத்தியத்தின் போர்வெறியை, ஈரான் நாட்டின் எண்ணெய் வளத்தை, கொள்ளை அடிக்கும் ஆதிக்க வெறியை கண்டித்து, இந்தியாவும், இந்தியாவைப் போல் வளரும் நாடுகளையும், ஒருங்கிணைத்து, செயல்படுவதன் மூலம் போரை நிறுத்த முடியும். அதன் மூலம் எரிபொருள் தட்டுப்பாடுகளை தடுக்க முடியும். ஆனால், மோடி ஆட்சி அதற்கு தயார் இல்லை. இந்திய பிரதமர் மோடி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இதுவரையிலும் கண்டிக்க கூட செய்யவில்லை. இது இந்திய இறையாண்மைக்கும், இந்தியாவின் வெளியுறவு கொள்கைக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பாகும்.

அண்மையில் ரஷ்யாவிடம் இந்தியா, ஒரு மாத காலத்திற்கு பெட்ரோலியப் பொருட்கள் வாங்கிக் கொள்ளலாம் என டிரம்ப அறிவித்ததை, தங்களது சாதனையாக சங்பரிவாரங்கள் ஆரவாரங்கள் செய்வதிலிருந்தே இவர்களுக்கு அமெரிக்கா மீது தான் விசுவாசம் என்பது வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

இப்போது பாஜக ஆட்சி அறிவித்துள்ள, எரிவாயு சிலிண்டருக்கு ரூபாய் 60 உயர்வுடன் விலை உயர்வு நிற்கப் போவதில்லை. அடுத்தடுத்து பெட்ரோலியம் சார்ந்த அனைத்து எண்ணெய் பொருள்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சர்வதேச முதலாளிகள் தீர்மானிப்பதை இந்திய உழைப்பாளி மக்களின் தலையில் சுமத்தும் கார்ப்பரேட் ஆதரவு பாதையை மோடியின் ஆட்சி தீவிரப்படுத்துவது மேலும் இதுபோன்ற விளைவுகளை ஏற்படுத்தும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கிறது.

எனவே, போருக்கு எதிராகவும், எரிவாயு விலை உயர்வுக்கு எதிரா கவும், மிகக் கடுமையான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அனைத்துப் பகுதி மக்களையும் கேட்டுக் கொள்கிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

## கூட்டணி வாய்ப்புகளை கோட்டை விட்ட தவெக: ஆதவ் மீது ஆதங்கத்தைக் கொட்டிய விஜய்

தவெகவை நெருங்கி வந்த கட்சிகளுடன் கூட்டணியை பேசி முடிக்காமல், முறுக்கி கொண்டிருந்த ஆதவ் அர்ஜுனா மீது அதன் தலைவர் விஜய் அதிருப்தியில் இருப்பதாக பனையூர் வட்டாரங்கள் சொல்கின்றன.

பலமான கூட்டணியை கட்டமைக்க வேண்டும் என்பதற்காகவே ஆரம்பத் திலேயே, “ஆட்சியில் பங்கு” என்ற அஸ்திரத்தை எடுத்து வீசினார் விஜய். அவரின் இந்த உத்தியானது பல கட்சிகளுக்கும் சபலத்தை உண்டாக்கியது.

முக்கியமாக, காங்கிரஸ் கட்சியானது விஜய்யை ஆயுதமாகப் பயன்படுத்தி கிட்டத்தட்ட திமுகவை மிரட்டவே ஆரம்பித்தது. தவெகவுடன் கூட்டணிக்கு வரும் கட்சிகளை பனையூருக்கு கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பை தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பொதுச் செயலாளரான ஆதவ் அர்ஜுனாவிடம் ஒப்படைத்தார் விஜய். அது மாத்திரமல்லாது, மற்ற கட்சிகளில் இருக்கும் முக்கிய தலைகளை தவெக பக்கம் தள்ளிக் கொண்டு வரும் பொறுப்பையும் ஆதவ்விடமே ஒப்படைத்தார். அப்படித்தான் முதல் விக்கெட்டாக செங்கோட்டையனை உள்ளே இழுத்துப் போட்டார் ஆதவ்.

ஆனால், பிற



கட்சி பிரபலங்களை தவெகவுக்கு இழுத்து வரும் விஷயத்தில் காட்டிய அக்கறையை கட்சிகளை கூட்டணிக்குள் கொண்டு வரும் விஷயத்தில் ஆதவ் காட்டவில்லை. தனது ‘வாய்ஸ் ஆஃப் காமன்ஸ்’ அமைப்பு எடுத்துக் கொடுத்த புள்ளி விவரங்களை மட்டுமே நம்பிக் கொண்டு கூட்டணிக்கு காத்திருந்த கட்சிகளை ஆதவ் கண்டுகொள்ளவில்லை என்கிறார்கள்.

நவம்பர் வரை தவெகவுக்கு சிக்னல் கொடுத்துக் கொண்டிருந்த டிடிவி. தினகரனுக்கு பனையூர் பக்கமிருந்து எந்த பதிலும் இல்லை. செங்கோட்டையன் மூலமாக தூதுவிட்ட போதும் விஜய் தரப்பிலிருந்து தினகரனுடன் யாரும் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவில்லை. இதனால் அதிருப்தியடைந்த தினகரன், “ஜெயலலிதா போன்ற சீனியர்களை பார்த்த நான், நேற்று அரசியலுக்கு வந்த ஜூனியர்களிடம் நானாகப் போய் பேச வேண்டுமா?” எனக் கொதித்திருக்கிறார். இது தெரியாமல், “புத்தாண்டுக்குப் பிறகு தினகரன் நமது கூட்டணிக்கு வருகிறார்” என விஜய்யை நம்பவைத்துக் கொண்டிருந்தார் ஆதவ்.

இதேபோல் விஜய்யை ”எங்க வீட்டுப் பிள்ளை” என்று சொல்லிக் கொண்டிருந்த பிரேமலதாவையும் தவெக சரியாக அணுகவில்லை. தவெக கூட்டணி தொடர்பாக என்.ஆனந்த் தரப்பில் நம்பகமான பதில் வராததால் ஆதவ் அர்ஜுனாவிடம் பேசினார் சுதீஷ். அவரும், “பொங்கலுக்குப் பிறகு பேசுவோம்” எனச் சொல்லிவைக்க, சத்தமே இல்லாமல் தேமுதிகவை தங்கள் பக்கம் இழுத்துப் போட்டுவிட்டது திமுக.

இன்னொரு பக்கம் மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம், ஓபிஎஸ் உள்ளிட்டோருக்கும் தவெக தான் முதல் சாய்ஸாக இருந்தது. ஆனால் அங்கே, முன்னவர் செங்கோட்டையனுக்கு தரப்பட்ட ‘மரியாதைகளை’ பார்த்துவிட்டு அவர்களும் திமுக பக்கமே திரும்பிவிட்டார்கள். இப்போதே அமைச்சராகிவிட்ட தோரணையில் அதிகாரம் காட்டும் ஆதவ் அர்ஜுனாவும் இந்த விஷயத்தில் சிறு துரும்பையும் கிள்ளிப் போடவில்லை.

இப்படி எதிர்பார்த்திருந்த அனைவருமே திமுக பக்கம் சென்று விட்ட நிலையில், கடைசி கட்டமாக விஜய் காங்கிரஸை பெரிதும் நம்பினார். பிரவீன் சக்கரவர்த்தி அவரை நேரில் சந்தித்துப் பேசி, காங்கிரஸ் தலைமையிடம் நேரடியாகப் பேசுமாறு வழிகாட்டினார். ஆனால் அவரோ, அந்தப் பொறுப்பையும் ஆதவ்விடமே ஒப்படைத்தார். இதனிடையே, திமுகவின் கெடுபிடியான பேச்சுவார்த்தைகளை பிடிக்காத கிரிஷ் சோடங்கரும் தவெக தரப்பை அணுக முயற்சித்தார்.

ஆனால், அதிகாரபூர்வமாக பேச்சுவார்த்தைக் குழுவையே நியமிக்காமல் திரைமறைவில் பேச்சுவார்த்தை நடத்தியதை அவர் ரசிக்கவில்லை. அதேசமயம் ஆதவ் அர்ஜுனா செல்வப் பெருந்தகை போன்ற தமிழக காங்கிரஸாரை நம்பாமல் கே.சி.வேணுகோபால் மூலம் ராகுல் காந்திக்கு தூது அனுப்பினார். ராகுல் காந்தியோ, ஆதவ்வை நேரடியாகச் சந்திக்காமல் தனது சகாக்கள் மூலமாகவே பேச்சுவார்த்தை நடத்த நினைத்தார்.

காங்கிரஸ் திமுக பக்கம் செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஹைதராபாத் வந்த ராகுல் காந்தியை சந்திக்க ஆதவ் அர்ஜுனா பெரிதும் முயற்சித்தார். ஆனால், தமிழக காங்கிரஸ் எம்எல்ஏக்களில் 15 பேர், திமுகவுடன் கூட்டணி வைக்க வேண்டும் எனச் சொல்லிவிட்டதால் ராகுல் ஆதவ்வை சந்திக்கவில்லை. கடைசியில் காங்கிரஸும் தங்கள் கையை விட்டுப் போனதால் விஜய் ரொம்பவே அப்செட்டாகிப் போனார்.

இதையடுத்து, “கூட்டணிக்கு காத்திருந்த கட்சிகளுடன் உரிய முறையில் பேசி முடிக்காமல் இப்படி நமக்கு இருந்த வாய்ப்புகள் அனைத்தையும் கோட்டை விட்டுவிட்டீர்களே” என விஜய் ஆதவ் அர்ஜுனாவிடம் தனது அதிருப் தியை கொஞ்சம் சத்தமாகவே வெளிப்படுத்தியதாகச் சொல்கிறார்கள் தவெக முக்கிய புள்ளிகள்.



## சேதமடைந்த பாட்டையப்பன் நகர் சாலைகளுக்கு விடிவுகாலம்: எம்எல்ஏ விஜயகுமாருக்கு பொதுமக்கள் பாராட்டு

திருப்பூர், மார்ச்.9-

திருப்பூர் மாநகராட்சி 25 வது வார்டு, சோளிபாளையம் மற்றும் பாட்டையப்பன் நகர் பகுதிகளில் சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பகுதி பனியன் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பழுதடைந்திருந்த சாலையைச் சீரமைக்க மாமன்ற உறுப்பினர் தங்கராஜ் கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து, வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.என். விஜயகுமார் நேரில் ஆய்வு செய்து, உடனடியாகப் புதிய சாலை அமைக்க மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதன்படி சாலைப் பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. தங்கள் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய எம்.எல்.ஏவிற்கு அப்பகுதி பொதுமக்கள் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.



## அன்பைப் பகிர்ந்த மகளிர் தினம்: பரிசுகள் வழங்கி மகிழ்வித்த உதவி ஆய்வாளர் பிரியா

திருக்கனூர், மார்ச்.9-

புதுச்சேரி மாநிலம் திருக்கனூர் காவல் நிலையத்தில், மகளிர் தின விழா பொதுமக்களுடன் இணைந்து சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில், திருக்கனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரியா அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு, விழாவில் பங்கேற்ற பெண்களுக்கு உதவி ஆய்வாளர் பிரியா பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார். காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான பிணைப்பை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த இந்த நிகழ்வு, அனைவரது பாராட்டுகளையும் பெற்றது. விழாவில் பங்கேற்ற பொதுமக்கள், தங்களுடன் இணைந்து மகளிர் தினத்தைக் கொண்டாடிய உதவி ஆய்வாளருக்கும், காவல்துறையினருக்கும் தங்கள் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்தனர்.



## ஆலோசனை கூட்டத்தில் வடக்கு அல்லது தெற்குத் தொகுதிகளைக் கோரும் திருப்பூர் காங்கிரஸ்

திருப்பூர், மார்ச்.9-

திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் ஆலோசனைக் கூட்டம், மாவட்டத் தலைவர் கோபால்சாமி தலைமையில் நடைபெற்றது. முன்னாள் மாவட்டத் தலைவர் ஆர். கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நிர்வாகிகள் விருப்பமனுக்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மனுக்களை அளித்தனர்.

நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மானங்கள்: திருப்பூர் வடக்கு அல்லது தெற்கு சட்டமன்றத் தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்க வேண்டும்.

சுதந்திரப் போராட்ட தியாகி நல்லகண்ணு அவர்களுக்கு இரங்கல் தெரிவித்தல். பனியன் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு மற்றும் கேஸ் சிலிண்டர் விலை உயர்வை திரும்பப் பெறுதல்.

நிகழ்வில் வி.ஆர். ஈஸ்வரன், பாகனேரி ரவீந்திரன், ஜெயினுலாபுதீன், சாதிக், ஹாசன், அரிமா வெங்கடேசன், பாபு, தனபால், சரவணன், விக்டோரியா (மகிளா காங்கிரஸ்), சம்சாத் பேகம், காஜா, கோபாலகிருஷ்ணன், சிவக்குமார், அருள், கதிரேசன், ஜோதி, தேவசாமி, ராமு, சோஜன், கிருஷ்ணதாஸ், சுலைமான், சேக், வேலுச்சாமி, பூபதி, சுந்தர்ராஜ், சண்முகசுந்தரம், பிரதீப், டிவி.குமார், நடராஜ், முபாரக், சேக் தாவூத், பெப்சி கோவிந்தசாமி மற்றும் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



■ திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் எஸ்.சித்ரா தலைமையில் மைய அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து பெண் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் வாழ்த்துக்கள் கூறியும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். உடன் உதவி திட்ட அமைப்பாளர் சௌதாமணி, உதவி நகர திட்டமிடுநர் சுப்புத்தாய் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# “ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்த போகிறோம்” அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த பிப்ரவரி 28ம் தேதி முதல் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த போர் 8வது நாளாக நேற்றும் நீடித்தது. ஈரானில் இதுவரை 1,332 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். ஈரானின் வான் பாதுகாப்பு கவசங்களில் 80 சதவீதம் அழிக்கப்பட்டு உள்ளது. ஈரான் கடற்படையின் 30 போர்க்கப்பல்கள் தகர்க்கப்பட்டு உள்ளன.

அந்த நாட்டு விமானப் படையில் 8 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு உள்ளன. அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலில் ஈரான் தலைநகர் டெஹ்ரான் உட்பட 174 நகரங்களின் அரசு கட்டமைப்புகள் தரைமட்டமாக்கப்பட்டு உள்ளன.

மத்திய கிழக்கில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார் உள்ளிட்ட நாடுகளில் 20க்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவ தளங்கள் செயல்படுகின்றன. அவற்றை குறிவைத்து ஈரான் ராணுவம் தொடர்ந்து ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது.



ஜோர்டான் நாட்டில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளத்தில், தாட் வான் பாதுகாப்பு கவசத்தை ஏவுகணை தாக்குதல் மூலம் அழித்துவிட்டதாக ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. இதன் மதிப்பு ரூ.22,000 கோடி ஆகும். 8 நாள் போரில் அமெரிக்காவுக்கு பல ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் 6 அமெரிக்க வீரர்களும் உயிரிழந்துள்ளனர். ஈரான் தாக்குதல்களில் இஸ்ரேலில் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளனர். 1,200க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். அந்த நாடு முழுவதும் அவசர நிலை அமல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த சூழலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: அண்டை நாடுகள் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என்று ஈரான் அறிவித்துள்ளது. மேலும் அண்டை நாடுகளிடம் மன்னிப்பும் கோரியுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஈரான் இந்த முடிவை எடுத்துள்ளது. அந்த நாட்டின் அத்துமீறல்களால் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய கிழக்கின் அமைதி பாதிக்கப்பட்டு உள்ளது.

தற்போது ஈரானின் அத்துமீறல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது. மிகப்பெரிய இழப்பை அந்த நாடு சந்தித்து உள்ளது. அந்த நாட்டை நரகத்துக்கு தள்ளி உள்ளோம். இதற்காக ஈரானின் அண்டை நாடுகள், எனக்கு நன்றி தெரிவித்துள்ளன.

இன்றைய தினம் (சனிக்கிழமை) ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். ஈரான் சரண் அடையும். இல்லையெனில் முழுமையாக வீழ்ச்சி அடையும். ஈரான் ஆட்சியாளர்களின் தவறான நடவடிக்கைகளால் மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

போர்க்கப்பல்கள் குவிப்பு: பிரிட்டனின் குளோஸ்டர்ஷையர் விமானப் படைத் தளம், இந்திய பெருங்கடலின் டியாகோ கார்சியா தீவில் உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டு விமானப் படைத் தளத்தில் போர் விமானங்களின் நடமாட்டம் கணிசமாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக அமெரிக்க விமானப் படையின் அதிநவீன பி1 லான்சர், பி2 ஸ்பிரிட், பி52 ஸ்ட்ராடோபோர்ட்ரஸ் ஆகிய போர் விமானங்கள் இரு விமானப் படைத் தளங்களிலும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டு உள்ளன.

மேலும் மத்திய கிழக்கில் அமெரிக்க போர்க்கப்பல்கள் குவிக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக யுஎஸ்எஸ் ஜெரால்டு ஆர் போர்டு, வின்ஸ்டன் எஸ் சர்ச்சில், மாஹன், பெயின்பிரிட்ஜ், ரூஸ்வெல்ட், பல்கேலி, தாமஸ்ஹட்னர் ஆகிய போர்க்கப்பல்கள் மத்திய கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டு உள்ளன. இந்த போர்க்கப்பல்கள் ஈரான் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அரபிக் கடலில் அமெரிக்காவின் யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன், பிராங்க் இ பீட்டர்ன், ஸ்ப்ரூயன்ஸ், மைக்கேல் முர்பி, மெக்பால், ஜான் பின், மிலியஸ், டெல்பெர்ட் டி பிளாக், பிக்னே, மிட்சர் ஆகிய போர்க்கப்பல்கள் முகாமிட்டு ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றன.

இவை தவிர பிரிட்டனின் எச்எம்எஸ் டிராகன், பிரான்ஸின் சார்லஸ் டி கல்லே, எப்எஸ் லாங்குடாக், கிரீஸ் நாட்டின் பசாரா, கிமோன் போர்க்கப்பல்களும் மத்திய கிழக்கு பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## 'நான் முதல்வன்' திட்ட பயிற்சி மையம் மாவட்டம் தோறும் விரிவுபடுத்த மாற்றுத்திறனாளிகள் சங்கம் கோரிக்கை

கந்தர்வகோட்டை, மார்ச்.9-

தமிழ்நாடு அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று, யுபிஎஸ்சி (UPSC) தேர்வில் 56 மாணவர்கள் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். இந்தச் சாதனையைச் சாத்தியமாக்கிய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணைப் பொதுச் செயலாளர் ரகமதுல்லா தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.



சங்கத்தின் முக்கியக் கோரிக்கைகள் மற்றும் பாராட்டுகள்: புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் மற்றும் நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்களால் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தில் இருப்பதையும், மாணவர்களின் வெற்றி விகிதம் அதிகரிப்பதையும் சங்கம் பாராட்டியுள்ளது.

சென்னை, திருச்சி, கோவை மாவட்டங்களில் இருப்பது போல, அனைத்து மாவட்டங்களிலும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் ஐஏஎஸ், ஐபிஎஸ் பயிற்சி மையங்களை அமைத்து, பல நூறு அதிகாரிகளை உருவாக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழக அரசு வழங்கும் கட்டணமில்லா பயிற்சி, தங்கும் வசதி மற்றும் மாதந்தோறும் ரூ. 7,500 உதவித்தொகை போன்றவை கிராமப்புற ஏழை எளிய மாணவர்களின் கனவை நனவாக்குவதில் முக்கியப் பங்கு வகிப்பதாக ரகமதுல்லா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



## உதவிக் கரம் நீட்டிய அதிமுக மெர்ஸி ஹோம் இல்லத்தில் மகளிர் தின கொண்டாட்டம்

திசையன்விளை, மார்ச்.9-

திசையன்விளை அருகே உள்ள அணைக்கரை மெர்ஸி ஹோம் மனவளர்ச்சி குன்றிய ஆதரவற்றோர் இல்லத்தில், அதிமுக சார்பில் மகளிர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, இல்லத்தில் உள்ளவர்களுக்குப் புத்தாடைகள் மற்றும் ஐஸ்கிரீம்களை வழங்கினார். மேலும், கட்டடப் பணிக்காக ஒரு லோடு செங்கற்களை வழங்கியும் உதவினார்.

காப்பக இயக்குநர் அருட்சகோதரி ஜாய்ஸ் மேரி வரவேற்புரை வழங்கினார். ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி அமலராஜா, கிழக்கு ஒன்றிய செயலாளர் கேபிகே.செல்வராஜ், திசையன்விளை பேரூராட்சி தலைவி ஜான்சிராணி, மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவி வசந்தி, பிரதீப் ஸ்வீட்ஸ் அதிபர் முருகானந்தம், நம்பிராஜன், ஏசுதுரை, பெட்டைக்குளம் கணேசன், அணைக்கரை முருகன், அந்தோணி பிச்சை, பிரஜன், முருகன், சகாயம் மற்றும் தேவசீலன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானலில் 5 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மக்களின் குரலாய் தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் கட்சி முழக்கம்

கொடைக்கானல், மார்ச்.9-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில், தனது 5 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் நிறுவனர் வழக்கறிஞர் டாக்டர் எம்.சங்கிலி முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, மாநிலச் செயலாளர் மற்றும் திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் கோடை வி.ஆனந்த் தலைமை தாங்கினார்.




ஆர்ப்பாட்டத்தில், அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. இதில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டு தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

நிகழ்வில் தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் அமைப்புச் செயலாளரும், மாநில பொருளாளர், ஆர்.கே, ஆனந்தன், மாநில ஒருங்கிணைப்பாளர், மாவட்ட ஒருங்கிணைந்த மாவட்ட தலைவர் ஐய்யப்பன், மாநிலத் துணைத் தலைவர், மாவட்ட பொதுச் செயலாளர், ஆர்.ஆர்.ரவிக்குமார் ஜி, மாநில செயலாளர் போடி குமரேசன், மாநில மாணவரணி செயலாளர் ஸ்டாலின், மாவட்ட பொருளாளர் நவீன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் பழனி கார்த்திக், கரூர் மாவட்ட பொதுச் செயலாளர் காமேஸ்வரன், மதுரை புறநகர் மாவட்ட பொதுச் செயலாளர் மருது ஜி, தேனி மாவட்ட தலைவர் ராஜ்குமார், உசிலை ஒன்றிய செயலாளர் தெய்வம், திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைவர் வசீகரன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணை தலைவர் ரமேஷ், திண்டுக்கல் மேற்கு மாவட்ட அமைப்புச் செயலாளர் நவீன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் முருகேசன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் கார்த்திக், கொடைக்கானல் நகர செயலாளர் டேவிட் மற்றும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, நிர்வாகிகள் திரளானார் கலந்து கொண்டனர்.



# "எழுதாத பேனாவுக்கு ரூ. 82 கோடியில் சிலை எதற்கு?" திமுகவுக்கு பழனிசாமி கேள்வி

எழுதாத பேனாவுக்கு கடலில் ரூ. 82 கோடியில் சிலை வைக்க முயற்சிக்கின்றனர். எழுதாத பேனா வுக்கு சிலை எதற்கு? என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கேள்வி எழுப்பினார்.

ஈரோடு மாவட்டம் அந்தியூரில் அதிமுக சார்பில் 'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சார கூட்டம் நடைபெற்றது. இதில், அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி பேசியதாவது: அந்தியூர் விவசாயப் பகுதி. விவசாயத்துக்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கும் அதிமுக என்றும் துணை நிற்கும்.

அதனால் தான் 2016 2021ல் அதிமுக ஆட்சியின்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடன் ரத்து செய்யப்பட்டது. நீர்நிலைகளை தூர்வாரி, ஏரி மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இந்த திட்டத்தை திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டது.

தமிழகத்தில் தற்போது நடைபெறவுள்ள தேர்தல், யார் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கக்கூடிய தேர்தல். 2011ல் வறட்சிக்காலத்திலும், நிதி நெருக்கடியிலும் மக்களை அதிமுக அரசு பாதுகாத்தது. டெல்டா மாவட்டங்களை புயல் புரட்டிப் போட்டபோது, நிவாரணம் வழங்கி விவசாயிகளை அதிமுக அரசு காத்தது.

இந்தியாவிலேயே கரோனா பரவலை வேகமாக தடுத்தது அதிமுக அரசுதான். தற்போது, ரூ.1 லட்சத்து 36 ஆயிரம் கோடி கூடுதல் வருவாய் இருந்தபோதும், ரூ.5 லட்சம் கோடி கடன் சுமையை இந்த அரசு மக்கள் மீது சுமத்தி உள்ளது. இதை மக்கள் மீது வரியாக திணிப்பார்கள்.

அதிமுக ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.10 ஆயிரம் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். மத்திய அரசு எங்களுடன்தான் உள்ளது. தேவையான நிதியை கேட்டுப் பெறுவோம்.

அதிமுக ஆட்சிக்கு வந்ததும், தைப்பொங்கலுக்கு ரேஷன் கார்டு தாரர்களுக்கு ரூ.1,000, தீபாவளி பண்டிகையின்போது பெண்களுக்கு பட்டுச்சேலை வழங்கப்படும். அதிமுக ஆட்சியின்போது, அனைத்து அரசுத் துறைகளிலும் தேசிய விருது கிடைத்தது.

இப்போதைய திமுக ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் நிரம்பியுள்ளது. அதிமுக ஆட்சிக்கு வந்ததும், ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எழுதாத பேனாவுக்கு கடலில் ரூ.82 கோடிக்கு சிலை வைக்க முயற்சித்து வருகின்றனர். எழுதாத பேனாவுக்கு எதற்கு சிலை? அதேபோல, கார் பந்தயத்துக்கு ரூ.100 கோடிக்கு மேல் செலவு செய்துள்ளனர். இதுபோல மக்கள் வரிப்பணத்தை ஊதாரித்தனமாக இந்த அரசு செலவிட்டுள்ளது. 'உங்க கனவ சொல்லுங்க' என்ற திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார்.

மக்களின் கனவு, திமுக அரசை அகற்றுவதுதான். அதிமுக ஆட்சி அமைந்ததும் அந்தியூர் தொகுதிக்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களும் கொண்டு வரப்படும். இவ்வாறு அவர்பேசினார். நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் செல்வராஜ், கே.சி.கருப்பணன், பண்ணாரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# அது 'வொர்த்' இல்லை தவெக மகளிர் தின விழாவில் விஜய் பேசியது என்ன?

சென்னை, மார்ச்.09-

குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.2500, திருமணத்துக்கு பட்டுப் புடவையுடன், ஒரு பவுன் தங்கம், மாணவர்களின் இடைநிற்றலை தடுக்க தாய் அல்லது பாதுகாவலருக்கு ரூ. 15 ஆயிரம் , ஆண்டுக்கு 6 சிலிண்டர்கள் இலவசம் என பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ளார்.



தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் சர்வ தேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அக்கட்சியின் தலைவர் விஜய் பங்கேற்ற விழா நேற்று மாமல்லபுரத்தில் தனியார் நட்சத்திர ஓட்டலில் நடைபெற்றது. அதில் விஜய் பேசியதாவது: சிங்கப் பெண்கள் அத்தனை பேருக்கும் மகளிர் தின வாழ்த்துகள். ஒரு ஊரில் ஒரு பெரிய கோயில் யானை இருந்தது. அது உஷாரான யானை.

யாராலும் ஏமாற்ற முடியாது. ஆனால், ஒரு ஜகஜால கில்லாடி அந்த யானையை ஏமாற்றி விட்டார். எப்படி என்றால் தேங்காய் முடிக்குள் சுண்ணாம்பை வைத்துக் கொடுத்திருக்கிறார். அந்த யானையும் சாப்பிட்டுவிட்டது. பிறகு 'ஏமாத்துறதெல்லாம் தொழில் ரகசியம் ஐயாச்சாமி' என அந்த ஆள் தன் நண்பனிடம் பெருமை பேசியிருக்கிறார். கொஞ்ச நாட்கள் கழித்து அந்த நண்பர்கள் மீண்டும் சந்தித்திருக்கிறார்கள்.

'நான் மீண்டும் ஏமாற்றி காட்டுகிறேன்' என அந்த ஜகஜால கில்லாடி சொல்கிறான். வாழைப் பழத்தை வாங்கி அதில் பஞ்சைத் திணித்து யானைக்கு மீண்டும் கொடுக்கிறான். இப்போது யானை தும்பிக்கையைச் சுழற்றி அவனை வீசி எறிகிறது. அந்த யானைதான் நம்முடைய வாக்காளர்கள். ஜகஜால கில்லாடிகள் யார் என நீங்கள் நினைப்பதற்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

தேர்தல் வாக்குறுதிகள்: பெண்கள், குழந்தைகள், முதியோருக்கான தனி இலாகா அமைக்கப்படும். அது என்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். தமிழகத்தில் மகளிர் உரிமைத் தொகையாக வெறும் ரூ.1000 மட்டுமே கொடுக்கப்படுகிறது. அதை வைத்து மளிகை சாமான் கூட வாங்க முடியவில்லை. எனவே 60 வயது வரையுள்ள அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் மாதாமாதம் ரூ.2500 வழங்கப்படும். இதில், மாநில, மத்திய அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு மட்டும் விதி விலக்கு.

அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டம் மூலம் ஆண்டுக்கு 6 சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும். அண்ணன் சீர் திட்டம் மூலம் பெண்களின் திருமணத்துக்கு தரமான பட்டுப் புடவையும் ஒரு பவுன் தங்கமும் வழங்கப்படும். காமராஜர் கல்வி உறுதித் திட்டத்தின் வாயிலாக மாணவர்களின் இடைநிற்றலை தடுக்க தாய் அல்லது பாதுகாவலருக்கு ஆண்டுக்கு ரூ.15 ஆயிரம் உதவித் தொகை கொடுப்போம்.

வெற்றிப் பயணம் திட்டத்தின் கீழ் அரசுப் போக்குவரத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவசம். இதன் மூலம் தமிழகம் முழுவதும் எங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் திட்டத்தின் கீழ் ராணி வேலுநாச்சியார் படை ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் சாதாரண உடையில் கேமராக்களுடன் பெண்கள் பாதுகாப்புப் பணியில் இருப்பார்கள்.

அஞ்சலையம்மாள் அதிவிரைவு நீதிமன்றங்கள் திட்டம் மூலமாக பெண்களுக்கு எதிரான குற்றங்களை விரைந்து விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்படும். பொது போக்குவரத்தில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்புக்காக ஸ்மார்ட் பேனிக் பட்டன்கள் அமைக்கப்படும். அது 24 மணி நேர கட்டளை மையத்துடன் இணைக்கப்படும். சிசிடிவி கேமரா, விளக்குகள் அனைத்து இடங்களிலும் ஏற்படுத்தப்படும்.

ரேஷன் கடைகள், பள்ளிகல்லூரிகளில் இலவச நாப்கின்கள் வழங்கப்படும். சிங்கப்பெண்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள கடன்கள் திருப்பி செலுத்தப்படும். கூடவே மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ. 5 லட்சம் வரையில் வட்டியில்லா கடன் கொடுக்கப்படும். சுய உதவிக்குழுக்களில் பதிவு செய்து குறு, சிறு நிறுவனங்களாக மாறுவோருக்கு ஆண்டுக்கு ரூ. 5 லட்சம் மானியம் வழங்கப்படும்.

தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரமும், பேபி வெல்கம் கிட்டும் வழங்கப்படும். இன்னும் நிறைய திட்டங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் வரும் நாட்களில் நான் அறிவிப்பேன்.

தமிழகத்தில் போடப்படும் பட்ஜெட்டில் 20 சதவீதம் முதல்வருக்கும், 10 சதவீதம் அமைச்சர்களும் செல்கிறது. மக்களுக்கு ஒதுக்கப்படும் தொகையை முழுவதும் அவர்களுக்கே செலவு செய்துவிட்டால் சூப்பரான அரசை கொடுக்கலாம். அரசிடம் பணம் இல்லை என்கிறீர்கள். பிறகு எப்படி விடியற்காலையில் அனைவரது கணக்கிலும் ரூ.5 ஆயிரம் போட்டீர்கள். எனவே அரசிடம் பணம் இருக்கிறது, ஆனால் அதில் பற்றாக்குறை இருக்கிறது.


அதற்கு காரணம் ஸ்டாலின் சார் வரி தான். இதை நீக்கினாலே அனைத்தும் சரியாகிவிடும். சமீபமாக நிறைய பிரச்சினைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதற்காக நீங்கள் வருந்துவதைப் பார்க்க முடிகிறது. அதைப் பார்த்து எனக்கு வருத்தமாக இருக்கிறது. அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நாம் எல்லாரும் சேர்ந்து மக்கள் பிரச்னைகளைப் பார்ப்போம். அவ்வளவு எல்லாம் வருத்தப்படாதீர்கள். அது 'வொர்த்' இல்லை. இவ்வாறு அவர் பேசினார்.



■ கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மயிலேறிபாளையம் PRS திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஈஸ்வரசாமி அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் முன்னிலையில் 183 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். அருகில் பொள்ளாச்சி சார் ஆட்சியர் திரு ராமகிருஷ்ண சாமி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மாருதி பிரியா, ஆகியோர் உள்ளனர்.



■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், கோட்டையூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், 15வது நிதிக்குழு மானிய திட்டம் 202425 ன் கீழ் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி சிறப்பித்தார். உடன் கோட்டையூர் பேரூராட்சி தலைவர் திரு.கே.எஸ்.கார்த்திக் சோலை, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.மீனாட்சி, கோட்டையூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சே.உமாமகேஸ்வரன், புதுவயல் வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஆனந்த ராஜ், 1வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி பா.திவ்யாகுமாரி உட்பட பலர் உள்ளனர்.



# வளைகுடா நாடுகளில் இருந்து 52,360 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்: டிஜிசிஏ தகவல்

புதுடெல்லி, மார்ச்.09-

போர்ப் பதற்றம் நிலவும் வளைகுடா நாடுகளில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு வரை 280 விமானங்களில், 52,360 இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளதாக டிஜிசிஏ கூறியுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் நேற்று 8வது நாளை எட்டியது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுப்பதால் வளைகுடாவில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், மத்திய சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) நேற்று வெளியிட்ட அறிக்கையில், "வளைகுடா நாடுகளில் இருந்து இந்திய மற்றும் மத்திய கிழக்கு விமான நிறுவனங்கள் மற்றும் சிறப்பு விமானங்கள் மூலம் வெள்ளிக்கிழமை இரவு வரை 52,360 பேர் தாயகம் திரும்பியுள்ளனர். இந்த விமானங்களில் 184 விமானங்களை இந்திய விமான நிறுவனங்கள் இயக்கின. அதைத் தொடர்ந்து 85 ஐக்கிய அரபு அமீரக (யுஏஇ) விமானங்களும் 11 சிறப்பு விமானங்களும் இயக்கப்பட்டுள்ளன'' என்று தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது வழக்கமான விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இந்திய விமான நிறுவனங்கள் தாங்கள் பெறும் ஸ்லாட்களை பொறுத்து விமானங்களை இயக்குகின்றன. வளைகுடா பிராந்தியத்தில் நிலைமை ஸ்திரமற்றதாக இருக்கும் நிலையில் துபாய் விமான நிலையம் நேற்று காலை மூடப்பட்டது.

இந்நிலையில் 'எக்ஸ்' தளத்தில் ஐக்கிய அரசு அமீரகம் நேற்று காலை வெளியிட்ட பதிவில், "துபாய்க்கு செல்லும், அங்கிருந்து புறப்படும் அனைத்து விமானங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தயவுசெய்து விமான நிலையம் செல்ல வேண்டாம். இதில் மாற்றம் இருந்தால் பகிர்ந்து கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளது.

# ஆகம விதிகள்படி காஞ்சிபுரம் வரதர் கோயிலில் குடமுழுக்கு பணிகள் நடைபெறுகிறதா? - ஐகோர்ட்

காஞ்சிபுரம், மார்ச்.09-

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் குடமுழுக்குக்கான சீரமைப்பு பணிகள் ஆகம விதிகளின்படி நடைபெறுகிறதா என்பதை ஒரு துணைக் குழு அமைத்து ஆய்வு செய்ய மாநில அளவிலான நிபுணர் குழுவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலில் குடமுழுக்கு என்ற பெயரில் ஆகம விதிகளை மீறி கட்டுமான மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்புதல்களை சமர்ப்பிக்க அறநிலையத் துறைக்கு உத்தரவிடக் கோரி. அந்தக் கோயிலை கட்டிய மன்னரின் வாரிசு என்ற அடிப்படையில் கர்நாடகாவைச் சேர்ந்த கிருஷ்ண தேவராயா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ்.கே. ஸ்ரீனிவாசன், "குடமுழுக்கு என்ற பெயரில் தொல்லியல் முக்கியத் துவம் வாய்ந்த இந்த கோயிலில் புராதன ஆணையத்தின் அனுமதியின்றியும், மாநில அளவிலான நிபுணர் குழுவின் ஒப்புதல் பெறாமலும் அறநிலையத் துறை கட்டுமானப் பணிகளை மேற் கொண்டு வருகிறது.

குறிப்பாக கருவறைக்கு செல்ல மரத்தால் ஆன 6 படிகள் ஏற்கெனவே இருந்த நிலையில், தற்போது ஆகம விதிகளுக்கு புறம்பாக 10 படிகளாக மாற்றப்பட்டுள்ளது. கோயிலின் மேற்கூரையில் தங்க பல்லி இருந்த நிலையில் மேற்கூரை உயரத்தை குறைத்து ஃபால்ஸ் சீலிங் அமைக்கப்பட்டு, அதன் கீழ் தங்க பல்லி பொருத்தப்பட்டுள்ளது. இதுபோல பல்வேறு பணிகள் ஆகம விதிகளுக்கு முரணாக நடைபெற்று வருகிறது'' என குற்றம் சாட்டினார்.

பதிலுக்கு தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் மற்றும் அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர்.அருண் நடராஜன் ஆகியோர், "பிரசித்தி பெற்ற இந்த கோயிலில் குடமுழுக்கு பணிகளை மேற்கொள்ளும் முன்பாக தொல்லியல் துறைத் தலைவர், மாநில அளவிலான நிபுணர் குழுவினர், ஆகம நிபுணர்கள் உள்ளிட்டோருடன் பல்வேறு ஆலோசனை கூட்டங்களை நடத்திய பிறகே இப்பணிகள் நடந்து வருகின்றன.

3 மாதங்களாக பணிகள் முடக்கம்: கோயில் படிகளின் உயரம் ஒன்றரை அடியாக இருப்பதால் அதில் ஏற சிரமப்படும் பக்தர்களின் வசதிக்காக சாய்வுதளம் அமைக்கப்பட்டுள்ளது. படிகளில் ஏறிச்சென்று தரிசனம் மேற்கொள்ளும் பக்தர்களையும் தடுக்கவில்லை. தங்கப் பல்லியின் உயரம் குறைக்கப்பட்டிருப்பது ஆகம விதிகளுக்கு எதிரானது அல்ல.

கோயிலின் தொன்மை மாறாமல் சுவரோவியங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே 90 சதவீத பணிகள் முடிவடைந்து விட்ட நிலையில், கடந்த 3 மாதங்களாக எந்தப் பணியும் மேற்கொள் ளப்படா மல் முடங்கிக் கிடக்கிறது'' எனக்கூறி அறிக்கையை சமர்ப்பித்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, "கோயிலின் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகள் ஆகம விதிகளின்படி நடைபெறுகிறதா என்பதை மாநில அளவிலான நிபுணர் குழு ஒரு துணைக் குழுவை அமைத்து ஆய்வு செய்ய வேண்டும். அந்த குழுவில் ஆகமம் மற்றும் தொல்லியல் துறை நிபுணர்கள் இடம் பெற வேண்டும். ஆய்வு செய்யும் தேதியை முன்னதாக நிர்ணயித்து கோயிலில் அறிவிப்பு செய்ய வேண்டும். இந்த குழு அனைத்து தரப்பு ஆட்சேபங்களையும் ஆய்வு செய்து, எந்தெந்த பணிகளை தொடரலாம்.

எவற்றை தொடரக் கூடாது, எதை மாற்றி அமைக்கலாம் என மாநில அளவிலான குழுவுக்கு பரிந்துரைக்க வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில், எந்தெந்த பணிகளை தடையின்றி தொடரலாம் என்பது குறித்து மாநில நிபுணர் குழு தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும்" எனக் கூறி வழக்கை முடித்து வைத்துள்ளார்.



■ திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் எஸ்.சித்ரா தலைமையில் மைய அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து பெண் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் வாழ்த்துக்கள் கூறியும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். உடன் உதவி திட்ட அமைப்பாளர் சௌதாமணி, உதவி நகர திட்டமிடுநர் சுப்புத்தாய் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




## “சவாலான வாழ்வாயினும் சாதனை செய்து சரித்திரம் படைத்திடுங்கள்!” துணைவேந்தர் ந.பஞ்சநதம் எழுச்சியுரை

ரெட்டியார்சத்திரம், மார்ச்.9-
ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு பட்டமளிப்பு விழா 05.03.2026 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் ச. ரா. ஜெயப்பிரதா தலைமை தாங்கி வரவேற்புரை ஆற்றினார். காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ந. பஞ்சநதம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, மாணவ மாணவியருக்குப் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

அவர் தனது உரையில், "இளம் தலைமுறையினர் குறைகளைத் தவிர்த்து நிறைகளை முன்னெடுக்க வேண்டும்; துன்பங்களைக் கண்டு துவளாமல் குறிக்கோள்களை நோக்கிப் பயணித்துச் சாதனை படைக்க வேண்டும்" என நகைச்சுவையுடன் அறிவுறுத்தினார்.

விழாவில் துறைத் தலைவர்கள் முனைவர்கள் மு.சரவணன், கோ.முருகன், சோ. கௌரி, பா.கனிமொழி, இ. ரஞ்சித்குமார், துறைப்பேராசிரியர்கள், நிதியாளர் இ.ஆர். பி.சுகன்யா, அலுவலகப் பணியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.




## அன்பு பரிமாறப்பட்ட இப்தார் நிகழ்வு திருப்பூரில் மதிமுக சார்பில் சமூக நல்லிணக்க விழா மும்மதத்தினர் பங்கேற்பு

திருப்பூர், மார்ச்.9-
திருப்பூர் மாநகர் மாவட்ட ம.தி.மு.க சார்பில், சமூக நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி காந்திநகரில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருப்பூர் மாநகர் மாவட்டச் செயலாளரும், 24 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான நாகராஜ் தலைமை தாங்கினார். மாவட்டப் பிரதிநிதி முகமது சைபுதீன், சிறுபான்மைப் பிரிவுச் செயலாளர் லட்டு என்கிற நாசர் அலி, திருப்பூர் தெற்கு ஒன்றிய அவைத்தலைவர் பாபு சேட் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சாமுண்டிபுரம் பள்ளிவாசல் சார்பில் நிர்வாகிகள் சபியுல்லா, இதாயாத், அசன், உமர், அப்பாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு தொழுகை நடத்தினார்கள். முன்னதாக மும்மதத்தினர் இப்தார் நோன்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஒருவருக்கொருவர் அன்பையும், வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர். இதில் மாநகர் மாவட்ட அவைத்தலைவர் நேமிநாதன், மாநில மகளிரணி துணை செயலாளர் சு சாந்தாமணி, ஒழுங்கு நடவடிக்கை குழு உறுப்பினர் ஆடிட்டர் அன்பழகன், எம்.எல். எப். மாவட்ட கவுன்சில் செயலாளர் சக்திவேல், மாமன்ற உறுப்பினர் குமார், மாநில நெசவாளர் அணிச் செயலாளர் திருநாவுக்கரசு, துணைச் செயலாளர் கெச்சப்பன் உள்பட கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள், தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



## மக்கள் நலத் தீர்மானங்கள்: தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம்

அகரக்கட்டு, மார்ச்.9-
தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் பொதுச் செயலாளர் கொட்டாகுளம் கணேசன் மற்றும் பொருளாளர் சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார், புதிய நிர்வாகிகளுக்குப் பணி நியமனக் கடிதங்களை வழங்கிப் பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்: நிவாரணம்: நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் சமூக விரோதிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தமிழக அரசு நிவாரணமும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும்.

சாலை விரிவாக்கம்: அனந்தபுரம் ரயில்வே கேட் பகுதியில் கடந்த 8ம் தேதி லாரி விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து, விபத்துகளைத் தவிர்க்க நெடுஞ்சாலைத் துறை உடனடியாகச் சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

நினைவு நாள்: புகழ்பெற்ற சினிமா பாடலாசிரியர் பூவை கவிஞன் மாயவநாதன் பிறந்த ஊரான பூலாங்குளத்தில், வரும் ஏப்ரல் 16ம் தேதி அவரது பிறந்தநாளைக் கூட்டமைப்பு சார்பில் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இனி ஒவ்வொரு மாதமும் மாவட்டத் தலைவர்கள் தலைமையில் அந்தந்த ஊர்களில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

நிகழ்வில் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார், பொதுச் செயலாளர் கொட்டாகுளம் கணேசன், பொருளாளர் சுப்பிரமணியன், ராஜ் நயினார், குருசாமி நாடார், மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பெண் குழந்தைகள் பிறப்பு விகிதத்தில் முதலிடம் மகளிர் தின விழாவில் தென்காசி மாவட்ட ஆட்சியர் பாராட்டு

தென்காசி, மார்ச்.9-
சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.



பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதில் தமிழக அளவில் தென்காசி மாவட்டம் முதலிடம் பெற்றதைக் கொண்டாடும் வகையில், சிறப்பாகப் பணியாற்றிய அரசு அலுவலர்களுக்குச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டன. அங்கன்வாடி பணியாளர்களுக்கு குழந்தை திருமணத் தடுப்பு விழிப்புணர்வு நாட்காட்டிகளை ஆட்சியர் வழங்கினார். பெண் கல்வி மற்றும் முன்னேற்றம் குறித்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்குப் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, கல்லூரி முதல்வர் முனைவர் அமிர்தவல்லி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கோவிந்தன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் முத்துமாரியப்பன், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொ) மரு. கீதா, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் ரேணுகா, மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி. மதிவதனா மற்றும் அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவியர்கள், பேராசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

G. Siva
99437 75284
63800 79305
S.PRATHIKA
INTERIOR
No.3-2-34, Nallaiya Nayakkar 4th Street,
Alanganallur, Madurai - 625501.
Modular Kitchen | Bed Room | Pooja Room

S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
HALL MARK
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P. மணிகண்டன் B.Com., 78452 54592
P. பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

SRI GANAPATHY
ELECTRICALS
HARDARE & PIPES
#156, Jayakumar Lane, Omalur Road,
Five Road, Salem - 636 004
All Types of Electricals & Hardware Pipes Avail Here

98842 99777 91591 58769



## திருப்பூர் வீரமாகாளியம்மன் கோயிலில் நிழல் கூரை திறப்பு விழா எம்எல்ஏ கே.என்.விஜயகுமார் துவக்கி வைத்தார்

திருப்பூர், மார்ச்.9-
திருப்பூர் மாநகராட்சி 19வது வார்டு, கொங்கு மெயின் ரோட்டில் அமைந்துள்ள வீரமாகாளியம்மன், சித்தி விநாயகர் மற்றும் மகாமுனிஸ்வரர் திருக்கோயிலில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட நிழல் கூரை திறப்பு விழா இன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்த திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.என். விஜயகுமார், ரிப்பன் வெட்டி நிழல் கூரையைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அதிமுக பகுதி செயலாளர்கள் வானவில் கனகராஜ், ஹரிஹரன், மாமன்ற உறுப்பினர் லதா கேபிள் மோகன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் சாமி கணேஷ் மற்றும் வார்டு செயலாளர்கள் கனகராஜ், ரங்கசாமி, காலனி செல்வராஜ், எம்ஜிஆர் இளைஞர் அணி துணைத் தலைவர் தேவராஜ் உட்பட கட்சி நிர்வாகிகள், பகுதி அம்மா பேரவை மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.



## தனது சொந்த நிலத்தில் காட்பாடியில் எம்ஜிஆர் கோயில் சைதை துரைசாமி முன்னிலையில் புனித நீர் ஊற்றி குடமுழுக்கு

காட்பாடி, மார்ச்.9-
வேலூர் மாவட்டம் கரசமங்கலத்தில், புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் முன்னாள் எம்எல்ஏ ரகுபதி மகன் முரளியால் தனது சொந்த நிலத்தில் கட்டப்பட்ட பிரம்மாண்ட கோயிலின் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது.

கோபுரக் கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்ட இந்த விழாவில், சிறப்பு அழைப்பாளராக சைதை துரைசாமி பங்கேற்றார். மேலும், வாலாஜா சண்முகம், மண்ணு மூர்த்தி, சசிகுமார் உள்ளிட்ட கட்சிப் பிரமுகர்களும், திரளான எம்ஜிஆர் விசுவாசிகளும் கலந்து கொண்டு புரட்சித்தலைவரை வணங்கி வழிபட்டனர். ஏழை மக்களின் பாதுகாவலனாக வாழ்ந்த எம்ஜிஆரின் புகழ், கரசமங்கலம் மண்ணில் இந்த ஆலயத்தின் மூலம் என்றும் நிலைத்திருக்கும்.

## குடிநீர் விநியோகத்தில் அலட்சியம் காட்டினால் நடவடிக்கை: அதிரடி ஆய்வு செய்த மாவட்ட திட்ட இயக்குநர்!

திண்டுக்கல், மார்ச்.9-
திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள. கங்காதரணி திடீர் ஆய்வு மேற்கொண்டார். சில்வார்பட்டி ஊராட்சி, குமாரபாளையம் குடிநீர் தொட்டியில் ஆய்வு செய்தபோது, தண்ணீரில் முறையாக குளோரினேசன் கலக்கப்படாததைக் கண்டறிந்து அவர் கடும் அதிருப்தி தெரிவித்தார்.



அமைச்சர் ஐ.பெரியசாமி கடந்த 15 வருடங்களுக்கு முன்பு வருவாய்த்துறை அமைச்சராக இருந்தபோது காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடி தண்ணீர் கொண்டுவரப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் 10 வருடங்களுக்கு பிறகு தற்போது இந்த திட்டம் விரிவாக்;கம் செய்யப்பட்டு மலைக்கிராமமான ஆடலூர் பன்றிமலையைத் தவிர அனைத்து கிராமங்களுக்கும் காவிரி கூட்டுக் குடி தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சில்வார்பட்டி ஊராட்சி பகுதியில் குமாரபாளையத்தில் தரைத்தள தண்ணீர் தொட்டி உள்ளது. இந்த தண்ணீர் தொட்டி மூலம் சில்வார்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அப்பனம்பட்டி, கன்னிமானூத்து. கெச்சேணிபட்டி, கெச்சேணிபட்டி புதூர், காளனம்பட்டி, மாலைகோவில்பட்டி உட்பட 9க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் அதிரடியாக அப்பகுதிக்கு வந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.கங்காதரணி குமாரபாளையம் தண்ணீர் தொட்டியை ஆய்வு.

இதனைத் தொடர்ந்து, குடிநீர் விநியோக நேரத்தையும், குளோரினேசன் அளவையும் முறையாகப் பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும், கோடை காலம் வருவதால் குடிநீரை வீணாக்காமல், அனைத்து கிராமங்களுக்கும் தடையின்றி சீராக விநியோகிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஆய்வில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாக பொறியாளர் அம்சபிரியா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன் மற்றும் மலரவன், உதவி பொறியாளர் மகேந்திரன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன் மற்றும் ஊராட்சி செயலாளர் இராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000